# நடுச்சாலையில் நின்றுகொண்டு

# புகைப்படமா?

## ஆபத்தை விலைகொடுத்து வாங்காதீர்

கோலாலம்பூர், மே 1-

பெட்ரோனாஸ் இரட்டைக் கோபுரம், கோலாலம்பூர் மாநாட்டு மையம், புக்கிட் பிந்தாங் கோலாலம்பூர் ஆகிய பகுதிகளில் உள்ள சாலைச் சந்திப்புகளில் பயணிகள் புகைப்படம் எடுத்துக் கொள்வது சில சமயம் ஆபத்தில் முடியலாம்.

இவர்கள் சாலைச் சந்திப்புகளில் புகைப்படம் எடுப்பதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது. அது மட்டுமன்றி இவர்களின் செயல்களால் விபத்துகளும் நிகழக்கூடும்.

சம்பந்தப்பட்ட இந்தப் பகுதிகளில் வெளிநாட்டு - உள்நாட்டுச் சுற்றுப்பணிகள் அதிகம் திரள்கின்றனர். குறிப்பாக வார இறுதி நாட்களில் கூட்டம் அதிகமாக இருக்கிறது. அங்கு வரக்கூடிய புகைப்படக்காரர்கள் 10 முதல் 30 ரிங்கிட் கட்டணத்தில் சுற்றுப்பயணிகளுக்குப் புகைப்படம் எடுத்துக் கொடுக்கும் சேவையை வழங்குகின்றனர்.

சாலைச் சந்திப்புகளில் சுற்றுப்பணிகளை நிற்க வைத்து இப்படிப் புகைப்படம் எடுப்பது சில சமயம் ஆபத்தில் முடியலாம் என்று கொஸ்மோ தெரிவித்த செய்தி கூறியது.

மெனாரா கேஎல்சிசி போன்ற பகுதிகளில் நல்ல இடமாகப் பார்த்து புகைப்படம் எடுப்பதற்காக சிலர் சாலையைக்கூட பயன்படுத்துகின்றனர். இவ்வாறு செய்வது ஆபத்தானதாகும். சாலையின் நடுவே சுற்றுப்பயணிகள் புகைப்படம் எடுத்துக் கொள்வதைப் பார்த்ததும் வாகனத்தை நிறுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டு நெரிசலும் உண்டாகிறது.

சமூக வலைத்தளங்களிலும் இதுபற்றி விவாதிக்கப்பட்டு வருகிறது. அரச மலேசிய போலீஸ் படையும் கோலாலம்பூர் மாநகர் மன்றமும் இதுபோன்ற செயல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பலர் கேட்டுக் கொண்டனர்.

கேஎல்சிசி பகுதியில் இந்தப் பிரச்சினை மோசமடைகிறது. ஏனெனில் சுற்றுப்பயணிகள் சாலையில் நின்று கொண்டு படமெடுக்கின்றனர். இது ஆபத்தானதல்லவா என்று ஒருவர் கூறியிருக்கிறார்.




நடுச் சாலையில் நின்று கொண்டு படம் எடுத்தால் வாகனங்கள் எப்படிச் செல்ல முடியும்? கேஎல்சிசி சாலை சமிக்ஞை விளக்கு இருக்கும் பகுதியில் பாதசாரிகள் கடந்து செல்வதற்கான இடத்தில் சுற்றுப்பயணிகள் நின்று கொண்டு புகைப்படம் எடுத்துக் கொள்கிறார்கள். இதனால் நெரிசல் ஏற்படுகிறது என்று ஒருவர் கூறினார்.

புகைப்படத்தை மகிழ்ச்சியோடு எடுத்துக் கொள்கிறார்கள். பரவாயில்லை. விபத்து நிகழாமல் இருந்தால் சரி. வாகனமோட்டிகளும் மோட்டார் சைக்கிளோட்டிகளும் சென்று கொண்டிருக்கும் பாதையில் திடீரென யாராவது வீடியோ அல்லது புகைப்படம் எடுக்க குறுக்கே வந்தால் என்ன ஆகும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள் என்று பித்ரி என்பவர் கூறினார்.